# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2308/51 - 2022 දෙසැම්බර් මස 02 වැනි සිකුරාදා - 2022.12.02

*2308/51 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு
மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

கொழும்பு,
2022, திசெம்பர் 02.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், 2022 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றிடமிருந்து குறுகிய கால வெளிநாட்டு நாணயக் கடன்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. குறைந்தது 30 சதவீதம் கொண்ட உள்நாட்டு பெறுமதி சேர்த்தலைக் கொண்டுள்ள தமது உற்பத்திகளைத் தயாரிப்பதற்கான மூலப்பொருட்களை இறக்குமதி செய்கின்ற, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்காக (கடன்பெறுநர்), அத்தகைய இறக்குமதிகளின் கொடுப்பனவுகளுக்கு நிதியளிக்கும்

நோக்கத்திற்காக பின்வரும் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டும், சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் பணிப்புரைகளுக்கு அமைவாகவும், இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட தாய் கம்பனியிடமிருந்து அல்லது அதே கம்பனிகள் குழுமத்தினுள் கம்பனியொன்றிடமிருந்து (கடன் வழங்குநர்) குறைந்தபட்சம் ஓர் (1) ஆண்டு சலுகைக் காலப்பகுதி உள்ளடங்கலாக மூன்று (3) ஆண்டுகளுக்குக் குறைவான காலப்பகுதியுடன் வெளிநாட்டு நாணயக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு இத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(i) இறக்குமதி செய்யப்படவுள்ள அத்தகைய மூலப்பொருட்களைப் பயன்படுத்துகின்ற கம்பனி மூலம் தயாரிக்கப்படும் இறுதி உற்பத்தி, குறைந்தது 30 சதவீதம் கொண்ட உள்நாட்டுப் பெறுமதி சேர்த்தலினைக் கொண்டுள்ளது என்பதற்கு கைத்தொழில் அமைச்சின் செயலாளரிடமிருந்து கடன்பெறுநர் பரிந்துரையொன்றினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(ii) கடன்பெறுநர், அத்தகைய கடனின் கிடைப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் கடனைத் தீர்ப்பனவு செய்து மீள்கொடுப்பனவு செய்வதற்கும் மத்திய வங்கியினால் வழங்கப்படும் பணிப்புரைகளுக்கு உட்பட்டு "விசேட வெளிநாட்டு நாணயக் கணக்கு - குறுகிய காலக் கடன்கள்" கணக்கை திறந்து பேணுதல் வேண்டும்.

(iii) அத்தகைய கடனின் வட்டி வீதம், இலங்கையில் நிலவுகின்ற சந்தை வட்டி வீதங்களுக்கு ஒப்பிடத்தக்க நியாயமான சலுகை வீதத்தில் இருத்தல் வேண்டும்.

(iv) கடன் மீள்கொடுப்பனவுகள் (வட்டி உள்ளடங்கலாக), சலுகைக் காலத்தின் பின்னர் எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு கடன்கழிப்புச் செய்யப்படல் வேண்டும்.

(v) மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கொடுப்பனவுகள், நாட்டின் நடைமுறையிலுள்ள வர்த்தகச் சட்டங்களுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

இவ்வொழுங்குவிதிகளானது, இவ்வொழுங்குவிதிகளின் திகதியிலிருந்து ஓர் (1) ஆண்டு காலப்பகுதிக்குச் செல்லுபடியானதாகயிருக்கும்.

EOG 12-0056

இலங்கை அரசாங்கத அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.